பக்கங்கள்:-19

காலை முரசு

## ரெலோ கட்சியிலிருந்து விந்தன் இடைநிறுத்தம்!

**தலைமைக் குழுக் கூட்டத்தில் இடைநடுவில் வெளியேறினார்**



(விரிவான செய்தி 4 ஆம் பக்கத்தில்)

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 23 | ஞாயிற்றுக்கிழமை | 08.12.2024 | அதிர்வு 128






# தமிழ்க் கட்சிகளின் ஒன்றிப்புக்கு அரசியல் மீள்கட்டுமான முயற்சி!

## ரெலோ தலைமைக் குழு கூடி முடிவு

“பிரிந்து நின்று பயணிப்பது தமிழ்த் தேசிய அரசியலுக்குப் பாதகமான சூழலை ஏற்படுத்தும். அதனை நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளின் மூலம் உணர்ந்துள்ளோம்.”

- இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பேச்சாளர் சுரேன் குருசாமி தெரிவித்தார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக் குழுக் கூட்டம் வவுனியா, இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. அதன்பின்னர் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 05

# ஐ.தே.கவின் தலைமைப் பதவியை சஜித்துக்கு வழங்க வேண்டும் ரணில்

## அப்போதுதான் இணைவு சாத்தியம் என்கிறது ஐக்கிய மக்கள் சக்தி



“ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவி சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கப்பட்டால் மாத்திரமே இரு தரப்பு இணைவு என்பது சாத்தியமாகும். இதற்கான விட்டுக்கொடுப்பை ரணில் விக்கிரமசிங்க செய்யாதவரை இணைவு என்பது சாத்தியப்படமாட்டாது.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

“ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நானும் உள்ளேன். 05



‘நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரம் அல்ல, நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்.’

– இது நீதித்துறையின் மகாவாக்கியங்களில் ஒன்று.

நாடாளுமன்றத்துக்குள் நீதியை நிலைநாட்டும் உயர் பொறுப்பில் இருப்பவர் சபாநாயகர். நாடாளுமன்ற விவகாரங்களில் நீதியை நிலைநாட்டும் பொறுப்பு அவருடையது. அவருக்குரிய பிரதான – பிரத்தியேக – கடமையே அதுதான். இப்போது நேரடியாக அவர் தொடர்பான விடயத்திலேயே நீதியை நிலை நாட்டுவது மாத்திரமல்லாமல், அதை நிலை நாட்டுவதாக காட்ட வேண்டிய கடப்பாடும் அவருக்கு ஏற்பட்டிருக்கின்றது.

அவரது கல்வித் தகமை தொடர்பாக வெளியிடப்பட்ட தகவல்கள் சர்ச்சைக்குரியவனாக மாறி இருக்கின்றன.

ஆனால் அவ்விடயத்தில் நீதியை நிலை நாட்டுபவராகவோ அல்லது நிலை நாட்டுபவராகத் தம்மைக் காட்டுபவராகவோ அவர் 05







# தமிழின அழிப்பின் நினைவாக பிரான்ஸில் நினைவுக்கல் திறப்பு

பிரான்ஸில் தமிழர்கள் அதிகம் வாழும் seine-saint-denis மாவடத்தில் உள்ள பொபினி Bobigny நகர சபையால் தமிழின அழிப்பின் நினைவாக சமாதானத்தைக் குறிக்கும் ஒலிவ் மரம் நாட்டப்பட்டு நினைவுக் கல்லும் திறந்து வைக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் நினைவுக்கல்லை Bobigny பொபினி நகர பிதாவும் seine-saint-denis மாவட்ட சபை உறுப்பினருமான யடினநட எயனை திறந்துவைத்தார்.

குறித்த நினைவுக்கல்லில், "ஸ்ரீலங்கா அரசால் 1948 முதல் 2009 மே மாதம் வரை இனவழிப்பு செய்யப்பட்ட தமிழீழ மக்களின் நினைவாக" என்ற வாசகங்கள் பிரஞ்சு மொழியிலும் தமிழ் மொழியிலும் பொறிக்கப்பட்டிருந்தன.

நகர சபை மேயர் abdel sadi உரையாற்றும்போது, பொபினி நகர சபையில் 2021 தமிழின அழிப்பை அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றியதையும் , பொபினி நகரம் தமிழ் மக்களின் நீதியை வென்றெடுக்கத் துணை நிற்பதையும் சுட்டிக்காட்டினார்.

















# பாலின அடிப்படையிலான வன்முறைகள் ஒழிக்கப்பட வேண்டும்: பிரதமர் ஹரிணி

சமூகத்தில், பாலின அடிப்படையிலான வன்முறைகள் ஒழிக்கப்பட வேண்டும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் சமத்துவத்தை மேம்படுத்த நாடாளுமன்ற மகளிர் மன்றம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைத்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பாலின சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம் எனவும் தெரிவித்தார்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் உலகத்திலும் இலங்கையிலும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன எனவும் பொது இடங்களிலும், தங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களிடமும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைத்த மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், பாலின சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் முறைப்பாடுகளை ஆராய்ந்து துரிதமாக நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பெண்கள் மீது இணையத்தினூடாக மேற்கொள்ளும் குற்றங்கள் தொடர்பில் கடினமாக நடவடிக்கை எடுப்பதாகவும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.













# ரெலொ கட்சியிலிருந்து விந்தன் இடைநிறுத்தம்!

## தலைமைக் குழுக் கூட்டத்தில் இடைநடுவில் வெளியேறினார்



(கி.வசந்தன்)

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைமைக்குழு உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் கட்சியில் இருந்து தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளமையுடன் அவரிடமிருந்து விளக்கம் கோரி கடிதம் அனுப்புவதற்கு தலைமைகுழு தீர்மானித்துள்ளது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக் குழு கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் உள்வீட்டு தகவல்களை வெளிப்படுத்தினார் எனத் தெரிவித்து விந்தன் கனகரத்தினம் மீது உறுப்பினர்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இதனையடுத்து அவரைக் கட்சியில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தி, அவரிடம் இருந்து விளக்கம் கோருவதாக தலைமைக்குழு தீர்மானித்துள்ளது.

இதன்போது அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு சில உறுப்பினர்கள் எதிர்ப்பு வெளயிட்டனர்.

இந்தத் தீர்மானத்தையடுத்து விந்தன் கனகரத்தினம் கூட்டத்தில் இடைநடுவில் வெளியேறிச் சென்றார்.


இதேவேளை கட்சியின் தீர்மானத்தை மீறி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு அளித்தமைக்காக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கத்திடம் விளக்கம்கோரி கடிதம் அனுப்பவும் தலைமைகுழு தீர்மானித்தது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் வேட்பாளரை பெயரிடும் விடயம் தொடர்பாக சுரேன் குருசாமி, சபா குகதாஸ் ஆகியோரிடமும் விளக்கம் கோரி கடிதம் அனுப்பவுள்ளதாக தலைமைக்குழு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# தென் கிழக்கு வங்காள விரிகுடாவில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம்

தென்கிழக்கு வங்காளவிரிகுடா பிராந்தியத்தில் நேற்று முற்பகல் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமொன்று உருவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையானது எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து மேலும் வலுவடையுமென கூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதியளவில் இலங்கை - இந்திய தமிழ்நாடு கரையோரத்திற்கு அப்பால் தென்மேற்கு வங்காளவிரிகுடா கடற்பிராந்தியத்தை இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் அண்மிக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.




இதனால் இந்த கடற்பிராந்தியங்களில் மணிக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசுனெவும் இடைக்கிடையே பலத்த மழைபெய்யக் கூடுமெனவும் எதிர்வுக்கூறப்பட்டுள்ளது.

இந்தக் காலகட்டத்தில் கடல் கொந்தளிப்பாக இருக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கடற்றொழிலாளர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டுமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இல்லை என்பதுதான் விசனத்துக்குரிய நிலைமையாகும்.

அவரது கல்வித் தகைமை குறித்த விடயம் பெரும் சர்ச்சைக்கும் கேள்விக்கும் உரியதாக மாறியிருக்கின்றது. ஆனால் அக்குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை என சபாநாயகர் அசோக ரன்வல தெரிவித்திருக்கின்றமை அவர் நீதியாகச் செயற்படுகின்றார் என்ற கருத்தைத் தரவில்லை.

சபாநாயகர் அசோக ரன்வல பட்டப்படிப்பை முடித்திருந்தால் அதை நிரூபிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, சமூக மற்றும் தொழிற்சங்க செயற்பாட்டாளர் பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தெவ்சிறி ஆகியோர் சவால் விடுத்திருந்தனர்.

சபாநாயகர் அசோக ரன்வலவின் பட்டம் தொடர்பில் சமூக ஊடகங்களில் பல்வேறு கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்ற நிலையில் இந்த விடயத்தை ஒட்டி சபாநாயகர் பதிலளித்துள்ளார்.

தான் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டத்தையும் ஜப்பானில் கலாநிதி பட்டத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார் என சபாநாயகர் அசோக ரன்வல தெரிவித்துள்ளார்.

தமக்கும் கட்சிக்கும் அவதூறு ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறு பிரசாரம் செய்யப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த குற்றச்சாட்டுக்களுக்கு தற்பொழுது பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அப்படிக் கூறுவதற்குப் பதிலாக, தமது பட்டச் சான்றிதழ்களின் பிரதிகளை அவர் பகிரங்கமாக முன்வைத்திருக்கலாம். அல்லது அவற்றின் விவரங்களை வெளியிட்டிருக்கலாம்.

அதை விடுத்து, இந்த குற்றச்சாட்டுக்களுக்கு தற்பொழுது பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை என அவர் கூறியிருக்கின்றமை நீதி நிலைநாட்டப்படுவதான நம்பிக்கையை மக்களுக்கு ஏற்படுத்தாது. மாறாக, எங்கோ ஓர் ஒளிப்பு மறைப்பு இடம் பெறுவதான சந்தேகத்தையே தந்து நிற்கும்.

## தமிழ்க் கட்சிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த தேர்தலில் நாங்கள் பெற்றுக் கொண்ட பெறுபேறுகள், அதில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாகப் பேசியிருக்கின்றோம். குறிப்பாக எதிர்காலத்தில் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்கும் முகமாகத் தமிழ்த் தரப்பில் இருக்கக்கூடிய அனைவரும் ஒருமித்துப் பயணிப்பது தொடர்பான விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தென்னிலங்கையின் அலை பெரிதாக வீசப்பட்டு எமது இளைஞர்கள் அள்ளுண்டு போனதை நாங்கள் அவதானித்திருக்கின்றோம். தமிழ்த் தேசியத்தை வலியுறுத்துகின்ற வாக்குகள் கணிசமான அளவு வழங்கப்பட்டிருந்தாலும் எங்களது கட்சிகளுக்கிடையில் இருந்த பிரிவினைகள் தென்னிலங்கைக் கட்சிக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. அது அந்தக் கட்சிக்கு அதிக ஆசனங்களைப் பெறுவதற்கு வழிவகுத்துள்ளது.

ஆகவே, பிரிந்து நின்று பிரிவினையுடன் பயணிப்பது எமது இனத்தினுடைய இருப்புக்கும் எதிர்காலத் தமிழ்த் தேசிய அரசியலுக்கும் பாதகமான சூழலை ஏற்படுத்தும். அதனை இந்தத் தேர்தல் முடிவுகளின் மூலம் உணர்ந்துள்ளோம். இதனைச் சீர்செய்து கொண்டு தமிழ்த் தேசியப் பரப்பிலே பயணிக்கின்ற அனைவரையும் ஒருமித்துக்கொண்டு பயணிப்பது பற்றி கலந்துரையாடி இருக்கின்றோம்.

இது தொடர்பாக மாவட்ட ரீதியாகவும் எமது கட்சி உறுப்பினர்களோடு பேசுவதற்குத் தீர்மானித்துள்ளோம். இன்னும் பலமான வகையில் மீள்கட்டுமானத்தைச் செய்து எமது அரசியலை முன்னெடுக்கத் தயாராகவுள்ளோம்.

அத்துடன் கட்சிக்குள் நடந்த பிரச்சினைகள் தொடர்பாக மாவட்ட ரீதியாகவும் கூட்டங்களை நடத்தி அவற்றை ஆராய்வதாகத் தீர்மானித்துள்ளோம்." – என்றார்.

## ஐ.தே.கவின் தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த இணைவு என்பது அரசியல்பிரசாரமாக இருக்கக்கூடாது. உண்மையான இணைவாக இருக்க வேண்டும்.

அப்படியானால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை பொறுப்பேற்குமாறு சஜித்துக்கு, ரணில் அழைப்பு விடுக்க வேண்டும். அவ்வாறு அல்லாமல் வெறுமனே பேசிக்கொண்டிருப்பதால் நடக்கப்போவது எதுவும் இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் உண்மையான இணைவுக்காகக் குரல் கொடுக்க வேண்டும். மாறாக தோல்வியை மறைப்பதற்காக இணைவு பற்றி பேசி பயன் இல்லை." – என்றார்.

NORTH BEAT
The North's pulse, in Every Beat
வடக்கின் செய்திகளை ஆங்கிலத்தில் உடனுக்குடன் தரும் ஒரேயொரு இணையத்தளம்
www.northbeat.lk

# கோபா குழுவின் தலைவராக ஹர்ஷ?



நாடாளுமன்றத்தில் கோபா குழுவின் தலைமைப் பதவியை எதிரணிக்கு வழங்குவதற்கு அநுர அரசு தீர்மானித்துள்ள நிலையில், அந்தப் பதவிக்கு கலாநிதி ஹர்ஷ டி சில்வாவை ஐக்கிய மக்கள் சக்தி நியமிக்கலாம் எனத் தெரியவருகின்றது.

எனினும், எரான் விக்கிரமரத்னவை தேசியப் பட்டியல் ஊடாக சபைக்குக் கொண்டு வந்து, அவரை கோபா தலைவராக்குவதற்குரிய பரிசீலனைகளும் இடம்பெறுவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் ஹர்ஷ டி சில்வாவுக்கும் இடையில் மனக் கசப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று அண்மைக்காலமாகத் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட சோதனை நடவடிக்கைகள்




பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நுகர்வோர் விவகார அதிகார சபையினால் விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நேற்று புறக்கோட்டை பகுதியிலுள்ள பழக் கடைகள் மற்றும் அத்தியாவசிய பொருள்கள் விற்பனை நிலையங்கள் உள்ளிட்டவை சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இதன்போது, இறக்குமதியாளரின் விபரங்களின்றி உணவுப்பொருள் விற்பனை செய்த மற்றும் பாடசாலை உபகரணங்களின் விலையைக் காட்சிப்படுத்தாமல் விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், புறக்கோட்டை பழைய நகரசபை கட்டடத்தில் நடத்தப்பட்ட சோதனையின் போது, ஊதுபத்தி உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் இரசாயன கரைசல்கள் அதிகளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த விசேட சோதனை நடவடிக்கைகள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

# பண்டிகைக் காலத்தில் முட்டையை தட்டுப்பாடின்றி வழங்க முடியும்



எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் முட்டை மற்றும் இறைச்சியைத் தட்டுப்பாடின்றி மக்களுக்கு வழங்க முடியும் என இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதம் வரை முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலையில் மாற்றம் இருக்காது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பண்டிகைக் காலங்களில் கோழி இறைச்சியின் விலையை 1000 ரூபாவிற்கும் குறைவாகவே பேண முடியும் என இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.



# ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது!

ஒரு கோடி ரூபா பெறுமதியான 500 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜா – எல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வைத்து சந்தேகநபர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜா – எல பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஜா – எல பிரதேசத்தில் வசிக்கும் 38 வயதுடையவர் ஆவார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் இதற்கு முன்னரும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டவர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார் என்று ஜா – எல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# யாழில் 362 வேட்பாளர்கள் கணக்கறிக்கை சமர்ப்பிப்பு




யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட 396 வேட்பாளர்களில் 362 வேட்பாளர்கள் தமது தேர்தல் கணக்கறிக்கையைத் தாக்கல் செய்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இருந்து 23 அரசியல் கட்சிகளும், 21 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டன. இரண்டிலுமாகச் சேர்த்து 396 வேட்பாளர்கள் களமிறங்கியிருந்தனர்.

தேர்தல் முடிவடைந்த பின்னர் வேட்பாளர்கள் தமது கணக்கறிக்கையைத் தாக்கல் செய்யவேண்டும் என்பது இம்முறை கட்டாய சட்டமாக்கப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் நள்ளிரவு வரை அதற்காக அவகாசம் வழங்கப்பட்டிருந்த நிலையில், 396 வேட்பாளர்களில் 362 வேட்பாளர்கள் தமது தேர்தல் கணக்கறிக்கையைத் தாக்கல் செய்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி. அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சர்வதேசத்தின் பதில்

இலங்கையில் தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் அதே ஆயுதமுனையில் தோற்கடிக்கப்பட்டு 15 வருடங்கள் தாண்டி விட்டன. ஆயினும் இந்த யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் குறித்தெல்லாம் நீதி, நியாயமான விசாரணைகளோ பொறுப்பு கூறல் பொறிமுறையோ முன்னெடுக்கப் படவில்லை என்பது தமிழர்களுடையது மட்டுமல்லாமல் சர்வதேசத்தினதும் ஆதங்கமாகவும் நீடிக்கின்றது.

'பயங்கரவாதத்தைப் பயங்கரவாதத் தால் வெல்லுவது' என்ற புதுவிதமான நியாயப்படுத்தலை தனக்குள் ஏற்படுத்திக் கொண்டு அடுத்தடுத்து வந்த கொழும்பு ஆட்சிபீடங்கள் பெரும் எடுப்பில் புரிந்த மிகக் கொடூரமான - ஈவிரக்கமற்ற - காட்டுமிராண்டித்தனமான - அரச பயங்கரவாதம் தொடர்பில் இன்னும் நீதி நிலைநாட்டப்படவில்லை.

இந்த மோசமான மனித உரிமை மீறல் விவகாரம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையன்று சர்வதேச மனித உரிமைகள் தினம் அனுஷ்டிக்கப்படும் போது மீண்டும் பெரிய விடயமாக சர்வதேச மட்டத்தில் அலசப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் என நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் இலங்கை அதிகாரிகளுக்கு எதிராகப் பிரிட்டனின் தற்போதைய புதிய அரசு எதிர்வரும் 10ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று தடைகளை விதிக்கும் என எதிர்பார்க்கின்றோம்." - என்று சர்வதேச மனித உரிமைகள் செயற்பாட்டாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

ஜொஹனஸ்பேர்க்கைத் தளமாகக் கொண்டு யஸ்மின் சூக்கா தலைமையில் இயங்கி வரும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டமானது, இலங்கையில் மனித குலத்துக்கு எதிரான மிக மோசமான மீறல் குற்றங்களிலும், ஊழல், மோசடிகளிலும் ஈடுபட்ட அரச மற்றும் பாதுகாப்புத் துறை அதிகாரிகளுக்கு எதிராகத் தடைகளையும், நுழைவு அனுமதித் தடையையும் விதிக்குமாறு வலியுறுத்தி, அதனுடன் தொடர்புடைய அறுபதுக்கும் மேற்பட்ட கோரிக்கைகளையும், ஆவணங்களையும் அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் அரசுகளுக்கும், ஐ.நா. சபைக்கும் அனுப்பி வைத்திருக்கின்றது.

அதன் அடிப்படையில் பிரிட்டன் உட்பட்ட நாடுகள் நாளை மறுதினம் வரும் சர்வதேச மனித உரிமைகள் நாளில் காத்திரமான பிரதிபலிப்பு நடவடிக்கைகளை எடுக்கும் என்று யஸ்மின் சூக்கா நம்புகின்றார்.

அவரது அமைப்பான உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டமானது, இலங்கையில் மோசமான மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட அரச மற்றும் பாதுகாப்புத் துறை அதிகாரிகளுக்கு எதிராக தடைகள் மற்றும் விசா அனுமதி தடைகள் தொடர்பான கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருப்பதுடன் உலகளாவிய சட்ட வரம்பெல்லையின் பிரகாரம் வழக்குப் பதிவுகளையும் கோரியிருக்கின்றது என்பது குறிப்பிடத் தக்கது.

இக்கோரிக்கைகள் மற்றும் ஆவணங்கள் அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் அரசுகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

இவை இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ், புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள், நீதிபதிகள், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினருடன் தொடர்புடைய கடந்த கால மனித உரிமை மீறல்கள் மற்றும் குறிப்பிடத்தக்க ஊழல், மோசடிகள் என்பன பற்றியவையாக இருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

இந்த ஆதாரங்கள், சமர்ப்பணங்கள், முன்வைப்புகள் தொடர்பாக சர்வதேசத்தின் பூர்வாங்கப் பதில் - பிரதிபலிப்பு - யாது என்பது சர்வதேச மனித உரிமைகள் தினமான நாளை மறுதினம் தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.



# இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்க கோரி ஆர்ப்பாட்டம்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிக்குமாறு தமிழகம் தங்கச்சிமடத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தமிழகம் இராமேஸ்வரம் தங்கச்சிமடத்தில் இந்திய கொம்யூனிஸ்ட் கட்சியினரின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையினரால் கடந்த 5 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 14 இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரினர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்த வருடத்தில் இதுவரை 529 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், இந்திய மீனவர்களின் 68 படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன என இலங்கை கடற்படை தெரிவித்தது.

# நடிகர் விஜய் கூறியது போல் திருமாவளவனுக்கு அழுத்தம்

## அ.தி.மு.க. துணை பொதுச் செயலர் கருத்து




“அம்பேத்கர் நூல் வெளியீட்டு விழாவில் திருமாவளவன் பங்கேற்காதது விஜய் கூறியது போல் அழுத்தம் இருப்பதாகவே நாங்கள் உணர்கிறோம்.”

– இவ்வாறு அ.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி கருத்து தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரியில், கிழக்கு மாவட்ட அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது. அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“அம்பேத்கர் நிகழ்ச்சியில், விசிக தலைவர் தொல்.திருமாவளவன் கலந்துகொண்டிருக்க வேண்டும். அவர் கலந்துகொள்ள முடியாத ஒரு சூழல் வருகிறது என்றால், த.வெ.க. தலைவர் விஜய் கூறியது போல், அழுத்தம் இருப்பதாகவே நாங்கள் உணர்கிறோம். வாரிசு அடிப்படையில் தான் மு.க ஸ்டாலின் முதல்வராகி உள்ளார்.

தனிப்பட்ட முறையில் உழைத்து அந்த இடத்துக்கு வரவில்லை. கருணாநிதியின் மகன் என்ற காரணத்தால் தான் இன்று கட்சியின் தலைவராகவும், முதல்வராகவும் உள்ளார். அதைத் தொடர்ந்து மன்னர் ஆட்சி போல், ஸ்டாலின் மகன் உதயநிதி ஸ்டாலின், அந்த கட்சிக்கு தலைமை ஏற்கவும், ஆட்சி தொடர்ந்தால் முதல்வர் ஆக்கவும், மகனை துணை முதல்வர் ஆக்கியுள்ளார். வாரிசு முறையில் இருக்கும் இந்த ஆட்சியை நீண்ட காலமாக அதிமுக எதிர்த்து வருகிறது. அதைத்தான் தற்போது விசிக-வின் துணை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, ஆட்சியின் செயல்பாடுகளை அறிக்கையாக வெளியிட்டால், அந்த அறிக்கையை மதிப்பதில்லை என மு.க.ஸ்டாலின் பதில் சொல்கிறார். அனுபவமிக்க மூத்த அரசியல் தலைவர் ராமதாஸ் கருத்து கூறினால், அவருக்கு வேறு வேலை இல்லை என விமர்சனம் செய்கிறார். அந்த ஆணவ போக்கில் தான் 2026 தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என அவர் சொல்கிறார். இந்த ஆணவத்துக்கு 2026 தேர்தலில் தக்க பதிலடியை தமிழக மக்கள் வழங்குவார்கள்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மக்களை ஏமாற்ற ஊத்தங்கரைக்கு இரவு 8 மணிக்கு வந்து, இரண்டு பேருக்கு நலத்திட்டம் கொடுத்துவிட்டு, யாரிடமும் பேசாமல், மக்களை சந்திக்காமல் செல்கிறார். இந்த செயல் த.வெ.க. தலைவர் விஜய் கூறிய, போட்டோ சூட் கருத்துக்கு உதயநிதி ஸ்டாலின் உடன்படுகிறார். அதே சமயம் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, மக்களின் உணர்வுகளை புரிந்துகொண்டு நேரடியாக பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சென்று, மக்களை சந்தித்து அறுதல் கூறியதுடன், ஊடகங்கள் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என தன்னுடைய உணர்வுகளை பகிர்ந்து கொண்டார்.

மக்களுடைய உணர்வுகளை புரிந்து கொள்ள வேண்டும் என்றால், பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்ற போது, தான் மக்களின் துயரமும், துன்பமும் தெரியும். தோராயமாக 2 ஆயிரம் கோடி ரூபா வெள்ள நிவாரணம் வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறுகிறார். அ.தி.மு.க. ஆட்சியில் பாதிப்பை கணித்து முதல் தவணை, இரண்டாம் தவணை என பிரித்து நிவாரணம் கேட்டோம். முதல்வர் ஸ்டாலினால், அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி, எவ்வளவு இழப்பீடு ஏற்பட்டுள்ளது என்பதை உடனடியாக கணிக்க முடியவில்லை. தற்போது 944.18 கோடி ரூபா மத்திய அரசு பேரிடர் நிவாரண நிதியில் இருந்து கொடுத்துள்ளது.

ஆட்சியாளர்கள் தன்னுடன் இருப்பவர்களுக்கு அரசியல் ரீதியாக அழுத்தம் கொடுக்கின்றனர். மக்களுக்கு தேவையான நன்மைகளை செய்யும் போது, உரியவர்கள் இடத்தில் அழுத்தம் கொடுக்க முடியவில்லை. பயந்து ஒதுங்கி கொள்கின்றனர். புதுச்சேரியில் 5000 ரூபா நிவாரணம் கொடுக்கிறார்கள். இங்கு 2 ஆயிரம் ரூபா தான் கொடுக்கிறார்கள். எதிர்க்கட்சியாக இருக்கும் போது, இயற்கை பேரிடரின் போது இறந்தால் 25 லட்சம் ரூபா வழங்க வேண்டும் என தற்போதைய முதல்வர் கூறினார்.

இப்போது, எவ்வளவு கொடுத்துள்ளார். எதிர்க்கட்சியாக இருக்கும் போது ஒரு பேச்சு, ஆளும் கட்சியாக இருக்கும் போது ஒரு பேச்சு பேசுகிறார் முதல்வர்.”– என்றார்.




# தென் கொரிய ஜனாதிபதியை பதவிநீக்கும் பிரேரணை மீதான வாக்கெடுப்பு தோல்வி!

தென் கொரிய ஜனாதிபதியை பதவிநீக்கும் பிரேரணை மீதான வாக்கெடுப்பு தோல்வியில் நிறைவடைந்துள்ளது.

மேற்படி பிரேரணை மீதான வாக்கெடுப்பு தோற்கடிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோலை பதவி நீக்கம் செய்யும் பிரேரணை மீதான வாக்கெடுப்புக்கு முன்னதாக ஆளும் கட்சியைச் சேர்ந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தவிர ஏனைய அனைவரும் வெளிநடப்பு செய்திருந்தனர்.

எவ்வாறாயினும், குறித்த பிரேரணையை மூன்றில் இரண்டு என்ற பெரும்பான்மையில் நிறைவேற்றுவதற்கு தென்கொரியாவின் எதிர்க்கட்சி தவறியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தென் கொரியா ஜனாதிபதி யூன் சுக் யோல் அவசரமாக இராணுவச் சட்டத்தை அறிவித்தார்.

இதனையடுத்து, தென் கொரியாவின் சியோலில் உள்ள தேசிய நாடாளுமன்றத்துக்கு வெளியே பல்லாயிரக்கணக்கான மக்கள் ஜனாதிபதியை நீக்கம் செய்யக்கோரி ஒன்று திரண்டனர்.

இந்தநிலையில், குறித்த இராணுவச் சட்டத்தினை அமுல்படுத்தவதற்கு எதிராக நாடாளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், அவரை பதவி நீக்கம் செய்வதற்கான பிரேரணையொன்றை எதிர்க்கட்சிகள் கொண்டுவந்தன.

எனினும், ஜனாதிபதி யூன் சுக் யோல், இராணுவச் சட்டத்தை அறிவித்ததற்காக நேற்று பொதுமக்களிடம் மன்னிப்புக் கோரியதுடன், மீண்டும் அதனை அமுல்படுத்தப் போவதில்லை எனவும் அறிவித்திருந்தார்.













# ஐவரி கோஸ்ட் இரு பஸ்கள் மோதி விபத்து: 26 பேர் பலி

ஐவரி கோஸ்ட் நாட்டின் மத்திய மேற்குப் பகுதியில் உள்ள ப்ரோகோவா என்ற கிராமத்தில் 2 மினி பஸ்கள் ஒன்றையொன்று வேகமாக மோதியதில் விபத்து ஏற்பட்டு இரண்டு பஸ்களும் தீப்பிடித்துள்ளன.

இதில் பஸ்களில் இருந்தவர்கள் உடனடியாக வெளியேற முடியாமல் சிக்கியதில், 26 பேர் உயிரிழந்தனர். 28 பேர் காயம் அடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஐவரி கோஸ்ட்டில் பாழடைந்த வீதிகள் மற்றும் கவனக்குறைவாக வாகனம் ஓட்டுதல் ஆகியவற்றால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.





# மோ. சைக்கிள் விபத்தில் இருவர் பரிதாப மரணம்!

களுத்துறை, தொடங்கொடை, நேஹின்ன பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று தொடங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

களுத்துறை, நேஹின்ன பிரதேசத்தைச் சேர்ந்த அசங்க சுஜித் அனுரகுமார (வயது 37) மற்றும் சுப்பிரமணியம் பத்மராஜா (வாத்து 42) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் வில்பாத்த பிரதேச வைத்தியசாலை மற்றும் களுத்துறை நாகொடை போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தொடங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவர்கள் பயணித்த படகு விபத்து: ஒருவர் உயிரிழப்பு



செல்லக்கதிர்காமம் 20 ஏக்கர் வாவியில் மாணவர்கள் சிலர் பயணித்த படகொன்று மூழ்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று மாலை இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் செல்லகதிர்காமம் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய ஒருவரென தெரியவந்துள்ளது.

ஐந்து மாணவர்கள் மேற்படி படகில் பயணித்துள்ளனர். படகு கவிழ்ந்ததை அடுத்து பிரதேச மக்களின் உதவியுடன் அவர்களை அனைவரும் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதே ஒருவர் உயிரிழந்துள்ளார்.



# வெள்ள நீரால் சூழ்ந்துள்ள கிராமங்கள் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு



யாழ். மாவட்டத்தில் தொடர்ந்தும் பல கிராமங்கள் வெள்ள நீரினால் சூழ்ந்துள்ளன. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம்– தவசிகுளம், பாலாவி, ஆத்தியடி, நாவலடிக் கிராமங்களில் வெள்ள நீர் வடிந்தோடக் கூடிய வடிகாலமைப்பு இன்மையால் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

குடியிருப்புக் காணிகள் வீதிகள் என்பன வெள்ளம் சூழ்ந்துள்ளது, இதனால் இம் மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது.

இக் கிராமத்து இளைஞர்கள் இணைந்து தமது சொந்த நிதியில், தேங்கியுள்ள வெள்ள நீரை வெளியேற்ற பாரிய நீர்ப் பம்பியை பயன்படுத்தியுள்ளனர்.

கடந்த இரண்டு தினங்களாக வெள்ள நீரை தமது கிராமத்தில் இருந்து வெளியேற்ற அவர்கள் அயராது பாடுபட்டு வருகின்றனர்.

# டெங்கு ஒழிப்பு சோதனைகள்

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் ஆளுகைக்குட்பட்ட பொலிகண்டி மேற்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு சோதனை தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் ஆளுகைக்குட்பட்ட பொலிகண்டி மேற்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் நேற்று முந்தினம் வெள்ளிக்கிழமை விசேட டெங்கு கட்டுப்பாட்டு செயற்றிட்டம், வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது வீடுகள் களத்தரிசிப்பு மேற்கொள்ளப்பட்டதுடன், நுளம்பு பெருகக்கூடிய சுற்றுச்சூழலை வைத்திருந்த 12 பேர் மீது சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.







# ஐந்தரைக் கோடி ரூபா பண மோசடி குற்றச்சாட்டில் வைத்தியர் கைது!

தனியார் நிறுவனம் ஒன்றின் பணிப்பாளராகக் கடமையாற்றிய வைத்தியர் ஒருவர், 5 கோடி 50 இலட்சம் ரூபா பண மோசடி செய்த குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோனஹேன, வேபட பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய வைத்தியரே கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொது முறைப்பாட்டுப் பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர்.



# வாகன இறக்குமதி தொடர்பில் எந்தவித தீர்மானமும் இல்லை

வாகன இறக்குமதிக்கு அனுமதி தருவதாக அரசாங்கம் அறிவித்தும், அது தொடர்பில் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார்.

அதன்படி, முதலாம் கட்டத்தின் கீழ் பேருந்து மற்றும் பாரவூர்தி என்பவற்றுக்கான அனுமதி வழங்கப்படும் என அரசாங்கம் தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்கு வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் மக்களும் வாகன இறக்குமதியாளர்களும் மிகுந்த எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் பல வாகன இறக்குமதியாளர்கள் அடுத்த வருடம் முதல் வாகனங்கள் இறக்குமதி செய்வது தொடர்பில், அவர்களது பேஸ்புக் மற்றும் இணையத்தளங்கள் ஊடாக விளம்பரப்படுத்தி வருகின்றனர்.

இதன்காரணமாக வாகன இறக்குமதி, பேசுபொருளாக மாறியுள்ளது.

இந்தநிலையில், வாகன இறக்குமதிக்கான உரிய தினத்தை அரசாங்கம் இதுவரையிலும் அறிவிக்கவில்லை என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகோ தெரிவித்துள்ளார்.



# நாடு அரிசி மொத்த விலை ரூ.225 சில்லறைக்கு விலை ரூபா 230

## அரிசி விற்பனையாளர்களுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல்





ஒரு கிலோ நாடு அரிசியை 225 ரூபா மொத்த விலைக்கும் 230 ரூபா சில்லறை விலைக்கும் விற்பனை செய்யுமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க ,அரிசி விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

இது தொடர்பில் அடுத்த பத்து நாள்களுக்குள் அவதானமாகச் செயற்படுமாறும், இதற்கு முரணாக செயற்படும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துமாறும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

வர்த்தக,வணிக, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அரிசி வியாபாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

நாட்டில் நெடுஞ்சாலைத் துறைக்காகவே அதிகளவில் முதலீடு செய்யப்படுவதாகவும், அடுத்து நீர்ப்பாசனத் துறைக்கும் விவசாயத் துறைக்குமே அதிக முதலீடு செய்யப்படுவதாகவும் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, விவசாயிகளுக்கே அதிக நிவாரணங்கள் வழங்கப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

நெல் கொள்வனவிற்காக வியாபாரிகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுவதாகவும் அதனால் மக்களின் அரிசியை நுகரும் உரிமையில் கைவைக்க வேண்டாம் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அதன்படி அரிசி விலைகள் பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

நாடு அரிசி ஒரு கிலோ மொத்த விலை 225 ரூபா, சில்லறை விலை 230 ரூபா.

வெள்ளை அரிசி மொத்த விலை 215 ரூபாய், சில்லறை விலை 220 ரூபா.

இறக்குமதி செய்யப்படும் நாடு அரிசி கிலோ 220 ரூபா, சம்பா அரிசி மொத்த விலை 235 ரூபா. சில்லறை விலை 240 ரூபா.

கீறி சம்பா அரிசி மொத்த விலை 255 ரூபா, சில்லறை விலை 260 ரூபா.

அதேபோல், நாளாந்தம் அரிசி ஆலைகளிலிருந்து வெளிவரும் அரிசியின் அளவினைக் கணக்கிடுமாறும் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல் விடுத்தார்.

அதே போன்று அரிசி தொடர்பான பிரச்சினைகளை அரசாங்கத்துடன் சுமூகமாக தீர்த்துக் கொள்ளுமாறும் அரிசி வர்த்தகர்களிடம் ஜனாதிபதி கோரினார்.



# நீரில் மூழ்கி மரணித்த மாணவர்களின் ஜனாஸாக்களை தேடிக் கண்டுபிடித்த தரப்புகளுக்கு பாராட்டி கௌரவம்

**(தில்சாத் பர்வீஸ்)**

கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது சிக்குண்டவர்களைக் கரைசேர்ப்பதிலும், மரணித்தவர்களின் ஜனாஸாக்களை தேடிக் கண்டுபிடித்து அவைகளுக்குரிய மார்க்கக் கடமைகளை செய்து நல்லடக்கம் செய்வதிலும் மனித நேயத்துடன் செயற்பட்டவர்களையும், அதற்காகப் பங்களிப்புச் செய்தவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று சம்மாந்துறை ஜம்மியத்துல் உலமா சபை, மஜ்லிஸ் சூரா, பெரிய பள்ளிவாசல், இஸ்லாமிய செயலகம் ஆகியவற்றினால் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 11 மணி முதல் 2.00 மணிவரை சம்மாந்துறை திராஸதுல் இஸ்லாமிய்யா மகளிர் அறபுக் கல்லூரியில் நடைபெற்றது.

சம்மாந்துறை பெரிய பள்ளிவாசல் தலைவரும், மன்னார் மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபருமான ஐ.எம்.ஹனீபா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி அமைப்பு, மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு, காரைதீவு தொண்டர் அமைப்பு ஆகியவற்றிக்கு கௌரவமும், பாராட்டுக்களும் உட்பட நினைவு சின்னமும் வழங்கப்பட்டன.

மேலும், விசேட துஆப் பிராத்தனை ஒன்றும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.













# இன்றைய ராசி பலன்கள் - 08.12.2024


மேஷம்

இன்றைய நாள் சாதகமான விளைவுகளையும் மகிழ்ச்சியான தருணங்களையும் அளிக்கும். நீங்கள் பொழுதுபோக்கு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைவீர்கள்.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும். அவர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். பணியில் உங்கள் செயல்திறன் திருப்திகரமாக இருக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இது இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்பட வழி வகுக்கும்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை உங்கள் தேவைக்கேற்ப பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


ரிஷபம்

இன்று உற்சாகமாக இருப்பீர்கள். இன்று நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். புதிய மனிதர்களை சந்திப்பீர்கள். இன்று முக்கியமான முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.உங்களின் சீரிய அணுகுமுறை மூலம் கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் திருப்தியான மனநிலை காரணமாக நீங்கள் உங்கள் துணையுடன் சிறந்த நட்பான அணுகுமுறை கொள்ள நேரலாம்.

இன்று நிதிநிலை மிகவும் திருப்திகரமாக இருக்கும். அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆற்றல் மூலம் உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

உங்களின் நேர்மறையான மன நிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


மிதுனம்

உங்களின் ஆர்வத்தை மேம்படுத்தும் திட்டங்களை இன்று எடுக்கலாம். இசை கேட்பது மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்றவை ஆறுதல் அளிக்கும். நம்பிக்கையான அணுகுமுறை சிறந்த பலனளிக்கும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படுவதால் பணிகளை சரியான குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. திட்டமிட்டு கவனமுடன் பணியாற்றினால் சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இந்த வேறுபாட்டை நீக்க நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். இன்று மகிழ்ச்சியாக இருக்க அவருடன் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும்.

பணபுழக்கம் குறைவாக இருக்கும். வீண் விரயங்களை தவிர்க்க பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.

உங்களின் மன உளைச்சல் காரணமாக நீங்கள் கால் வலியால் அவதிப்படுவீர்கள்.


கடகம்

இன்று உங்கள் செயல்களில் கவனம் தேவை. சிறப்பாக திட்டமிட்டால் பதட்டமின்றி செயல்படலாம். முக்கிய முடிவுகளை தள்ளிப்போடவும்.

பணியிடத்தில் சகபணியாளர்களுடனான உறவுமுறையில் சில குழப்பங்கள் காணப்படும். அதனை சமாளித்து பணியாற்ற இன்று பொறுமை அவசியம்.

இன்று சிறிய விஷயங்களைப் பெரிதாகக் கொள்வீர்கள். உங்கள் குடும்ப விஷயத்தில் உங்கள் துணையுடன் சில சிக்கல்களை சந்திக்க நேரும். மனம் திறந்து பேசி வேறுபாட்டை களைவதன் மூலம் உறவில் நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்படும்.

நிதிநிலை சிறப்பாக இருக்காது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் பணத்தை கடனாக வாங்குவீர்கள்.


சிம்மம்

உங்களின் திறமையான தகவல் பரிமாற்றம் மூலம் வெற்றிகரமான பலன் காண்பீர்கள். ஆன்மீக சொற்பொழிவு மற்றும் இறை மந்திரங்கள் ஜெபித்தல் ஆகியவற்றில் ஈடுபடுங்கள். இதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணியில் சிறந்த நல்ல பலன்கள் கிடைக்கும். பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் இருவரிடையே காணப்படும் நல்ல புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் வெளிப்படையாக மனம் திறந்து பேசுவீர்கள்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை ஆன்மீக விஷயங்களுக்கு செலவு செய்யலாம்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்திருக்கும். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.


கன்னி

இன்று உங்களிடம் வருத்தமான மன நிலை காணப்படும். உங்கள் முயற்சிகள் மூலம் வெற்றிகரமான பலன்கள் கிடைக்காது. இதனை சுமையாகக் கருதுவீர்கள். முறையாக திட்டமிட்டால் வெற்றி பெறலாம்.

நல்ல வாய்ப்பு வழங்கும் வேலை மாற்றத்தை நீங்கள் வரவேற்கலாம். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க சம்பவங்களை தீவிரமான போக்கில் எடுத்துக் கொள்வதை தவிர்க்க வேண்டும்.

தேவையற்ற செலவுகள் கவலையை அளிக்கும். பணத்தை முறையாக கையாள்வதன் மூலம் இதனை தவிர்க்கலாம்.


துலாம்

இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்காது. தேவையற்ற கவலைகள் காரணமாக இன்று உங்கள் திறன் குறையும். என்றாலும் நம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி பெறலாம்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் அணுகுமுறையில் கவனம் தேவை.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் ஏற்படலாம். எனவே உங்கள் துணையுடன் பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகளின் சுமை காணப்படும். பணத்தை திட்டமிட்டு முறையாக கையாள்வதன் மூலம் இதனை தவிர்க்கலாம்.

உங்கள் தாய்க்கு கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. அவரின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.


விருச்சிகம்

இன்று பதட்டமும் வருத்தமும் காணப்படும். நீங்கள் உணர்ச்சிப்பூர்வமாகப் பேசுவீர்கள். இதனை தவிர்ப்பதன் மூலம் பாதகமான சூழ்நிலை ஏற்படாமல் இருக்கும். பிரார்த்தனை சிறந்த பலனைத் தரும்.

பணியிடத்தில் அதிகப் பணிகள் காணப்படும். அதனால் உங்கள் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்களின் அகந்தைப் போக்கு காரணமாக உங்கள் துணையுடன் பிரச்சினை ஏற்படும். என்றாலும் மனம் திறந்த பேச்சின் மூலம் நன்மை விளையும்.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக பணப்பற்றாக்குறை காணப்படும். எனவே செலவுகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

நரம்பு பாதிப்பு காரணமாக கணுக்கால் மற்றும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 08.12.2024




இன்று சிறந்த மனநிலை காணப்படும். உங்கள் பணிகளை எளிதில் முடிப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

உங்கள் பணியில் வெற்றி பெறுவீர்கள். குறித்த நேரத்திற்கு முன்பே உங்கள் பணிகளை முடித்து விடுவீர்கள்.

உங்கள் அன்பான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் உங்கள் உறவில் மகிழ்ச்சி ஏற்படும்.

உங்கள் பணியில் நேர்மையாக இருப்பீர்கள். உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை வகையில் பணம் பெறுவீர்கள்.

உங்கள் சார்பாக செயல்படும் நல்ல நேரம் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். உங்கள் முடிவுகளில் கவனம் தேவை. நீங்கள் வீழ்ச்சியடையாமல் இருப்பதற்கு விவேகமாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படாது. வேலை இழக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது.

உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். நேர்மறையான அணுகுமுறை நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

உங்கள் அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு ஏற்படும். சேமிப்பதற்காக பணம் ஈட்டுவதை இன்று கடினமாக உணர்வீர்கள்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களிடம் ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும். உங்கள் புத்திசாலித்தனத்தால் இன்று வெற்றி காண்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

உங்கள் நேர்மை மற்றும் கடின உழைப்பு காரணமாக பணியிடச் சூழல் சுமூகமாக இருக்கும் உங்கள் செயல் திறன் திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணிகளை திறமையாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அனுசரித்துப் போவதன் மூலம் நன்மை விளையும். நீங்கள் இருவரும் பரஸ்பரம் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இன்றைய நாளை லாபகரமான முதலீடு செய்ய பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். இன்று சஞ்சலமான மனநிலையில் இருப்பீர்கள். இன்று தகுந்த முடிவுகளை எடுக்க இயலாது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதை கடினமாகக் கருதுவீர்கள். திட்டமிட்டு பணிகளை ஒழுங்கமைத்து செயலாற்றுவது சிறந்தது.

உங்கள் உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க நீங்கள் அமைதியான சகஜமான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். குடும்பத்திற்காக அதிக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.

தாயின் உடல்நிலை குறித்த கவலை இருக்கும். அவரின் ஆரோக்கியத்திற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரும்.










# தேசிய மக்கள் சக்தி அரசின் எதிர்காலம்: வாக்குறுதிகள் கனவாகுமா? கரை சேருமா?



வி.எஸ்.சிவகரன்

அரசியல் கணக்கிற்கு அப்பாற்பட்ட அதிகாரம் கையில் கிடைத்துவிட்டதால் தடுமாறுகிறதா அரசு? எதிர்க்கட்சியாக இருக்கும்போது பொறுப்பில்லாமல் வாய்க்கு வந்தபடி வார்த்தைகளை எல்லாம் அள்ளி வீசினார்கள். ஜனாதிபதி தேர்தலிலும் எண்ணற்ற வாக்குறுதிகள. அவற்றை நடைமுறைப்படுத்தக் கூடிய முறைமைகள் எதனையும் கருத்தில் கொள்ளாமல், போகிற போக்கில் பேசி விட்டுப் போனார்கள். ஆனால் இவ்வளவு அசுர பலத்துடன் ஆட்சி அமைப்போம் எனக் கனவில் கூட நினைத்திருக்கமாட்டார்கள். காலம் அவர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்கியிருக்கிறது.

பலர் காலத்தையே ஏமாற்ற முற்பட்டனர். அவர்களை காலம் காலாவதியாக்கிவிட்டது.

இந்த வாய்ப்பு எதுவரை நீளப் போகிறது? எப்படி நகரப் போகிறது? அரசியல் வியூகங்களையும், தந்திரோபாய அணுகுமுறைகளையும், செயற்பாட்டு முறைமைகளையும்ம் எவ்வாறு சமத்துவ அடிப்படையில் பகிரப் போகிறார்கள்?

அந்தப் பகிர்வின் நிலைத்தன்மையை அடிப்படையாகக் கொண்டே சமூக ஐக்கியம், பொதுமைத்துவப் படுத்தக்கூடிய பிணைப்பு, மனோநிலை போன்றவை வலுப்பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அவ்விதமான ஒரு களச்சூழல் இலங்கை தீவில் சாத்தியமா என்கின்ற கேள்வியும் இல்லாமல் இல்லை.

ஆட்சிக்கு வர முதல் எப்படியும் பேசிவிடலாம். பின்னர் பொறுப்பாக வார்த்தை பேச வேண்டும் என்கின்ற நிர்ணய நிலைக்குள் நிர்பந்திக்கப் படுகின்றது என்பது அதிகார கட்டமைப்பின் வலுக் கோட்பாடாகும். அதனை மீறவும் முடியாது, தடுக்கவும் முடியாது. அந்த அதிகார கட்டமைப்பை வழி நடத்தியே ஆக வேண்டும் என்கின்ற நிலைப்பாடு தோற்றம் பெற்றுள்ளது.

ஆட்சி நடத்திய அனுபவமோ, அயல் உறவு நிலைப்பாடுகளை கையாண்ட இராஜதந்திரமோ, நிதிமுறைமைகளை வகுத்த முன் அனுபவமோ, நிர்வாக இயலை நெறிப்படுத்திய பக்குவமோ இல்லை. அதிகளவான தொழிற்சங்கத்தை வைத்து ஆட்சியாளர்களுக்கு எதிராக கிளர்ச்சி ஏற்படுத்தியதும், போராட்டங்களை தூண்டியதும், இயல்பு வாழ்க்கைக்கு மாறான கருத்தியலை உட்புகுத்துவதுமாகவே ஜே.வி.பியின் கடந்த காலம் பொறுப்பற்ற நிலைப்பாடாக அமைந்திருந்தது. அவ்விதமான நிலைப்பாட்டை தொடர முடியாத நிர்பந்தம் ஏற்பட்ட பின்னரும் கூட அரசு மெத்தனப்போக்கையே கடைப்பிடிப்பதாகவே தோன்றுகிறது. இனவாதத்துக்கு எதிரானவர்கள், இனவாதத்துக்கு இந்த நாட்டில் இனி வாய்ப்பே இல்லை என மேடைகளில் தத்துவம் பேசுவதில் மாத்திரமே காலத்தைக் அழிக்கின்றார்கள். செயலில் அவ்விதமான வெளிப்பாட்டின் வெளிப்படை தன்மையும் நடவடிக்கையும் காணவில்லை.

முறைமை மாற்றம் செய்யப் போகிறோம் என மக்களுக்கு உத்தரவதம் வழங்கினார்கள். இதுவரை எந்த முறைமையும் மாற்றியதாக இல்லை. ரணில் அரசு ஏற்படுத்திய திட்டங்களையும் செயற்பாட்டையும் அதிகாரிகளையும் கூடவே வைத்துக் கொண்டு முறைமை மாற்றம் எனப் பேசுவது வேடிக்கையான வார்த்தைகளாகும். இலங்கையின் நிர்வாக முறைமை என்பதில் முழுக்க முழுக்க ஊழலும் பக்கசார்பான அரசியல் செல்வாக்குமே காணப்படுகின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தில் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கக்கூடிய தளர்வை ஏற்படுத்துவோம் எனக் கூறினார்கள். அது எதுவுமே நிகழவில்லை. மின்கட்டணம், நீர் கட்டணம், குறைப்போம் என்றார்கள். அது உள்ளபடியே தொடரும் என இப்பொழுது அறிவித்திருக்கிறார்கள்.

நாளாந்த வாழ்வாதார நிலைப்பாட்டிலும் மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டு இயல்பு வாழ்க்கையில் பாதிப்பு ஏற்படாத வகையில் அத்தியாவசிய பொருள்களின் விலையை குறைப்போம் என்றார்கள். ஆனால் தற்போது அரிசி, தேங்காய் உட்பட பல பொருள்களின் விலை அதிகரித்து விட்டது. மக்களினுடைய ஜனநாயக குரலுக்கும் மதிப்பளிப்போம் என்றனர். ஆனால் அது எந்த வகையிலும் நிகழக்கூடியது இல்லை என்பதனை மீண்டும் நிரூபித்து இருக்கிறது. இடைக்கால குறை நிரப்பு பாதீட்டில் எந்த மாற்றமும் ஏற்படுத்தப்பட்டதாக இல்லை.

ஆகவே மாற்றத்திற்காக வாக்களித்தவர்கள் ஏமாற்றத்தையே எதிர் நோக்க வேண்டிய நிலைப்பாடு எழும். ஏனெனில் நாட்டின் பொருளாதார நிலைமை இன்னும் அபாயகரமான நிலைமையில் இருந்து மீளவில்லை. அதனால் அபிவிருத்தி வேலைகள் என்பது சாத்தியம் குறைந்த ஒன்றே. முற்றிலும் அனுபவம் இல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்துக்கொண்டு சிறந்த நிர்வாக நிதியியல் முகாமைத்துவத்தை சமத்துவத்தோடு வழங்குவோம் எனக் கூறிக் கொண்டவர்கள், இப்பொழுது அதிகாரம் கிடைத்த பின்னர் அமைதி

தொடர்ச்சி ▼

# தேசிய மக்கள் சக்தி அரசின் எதிர்காலம்: வாக்குறுதிகள் கனவாகுமா? கரை சேருமா?

தொடர்ச்சி ▲

யாக இருக்கின்றனர். அரசியல் செய்வதற்குரிய களம் ஆளுங்கட்சி இல்லை என்பது இப்பொழுது அவர்களுக்கு தெளிவாகப் புரிந்து இருக்கும்.

இதுவரை எந்த விதமான நிவாரணத்தையும் மக்களுக்கு அறிவிக்கவில்லை. பொருளாதாரச் சுமையில் மிகவும் நலிவுற்று இருக்கும் இந்த மக்களுக்கு எந்த வகையிலும் இடைக்கால நிவாரணம் எதுவும் வழங்காமல் அரசியல் பேசுவது என்பது ஒரு மோசமான நிலைப்பாட்டை ஏற்படுத்தும். மாவீரர் தினத்திற்கு அனுமதி வழங்கியது போல் ஜே.வி.பியை ஆதரிக்க கூடியவர்கள் கட்டுக்கதை பரப்பினார்கள். அதை நம்பி, மாவீரர் தினத்திற்கோ, அந்நிகழ்வுகளுக்கோ எந்த வகையிலும் சம்பந்தமில்லாத – புலிகளின் பார்வையில் ஒட்டுக்குழு கட்சி ஒன்றின் – தலைவர் ஜனாதிபதிக்கு நன்றி கூறி கடிதம் எழுதி இருப்பது என்பது அடிமைத்தனத்தின் வெளிப்பாடு.

பயங்கரவாதக் குற்றத் தடுப்பு பிரிவினர் இளைஞர்கள், முதியவர்கள் என விசாரணைக்கு அழைத்தமை மட்டுமல்லாமல் நீதிமன்றம் ஏற்றி சிறையிலும் அடைத்தனர். அரசியல் கைதிகள் விடுதலையிலும் சாக்குப் போக்கு காரணத்தையே கூறுகின்றனர்.

வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கு எந்தவிதமான ஒரு அடிப்படை பிரச்சினையை தீர்க்கக் கூடிய திட்டங்கள் இருப்பதாக தெரியவில்லை. வனத்திணைக்களம், வன விலங்குகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை போன்றவை தமது நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் தமிழ் மக்களைத் தொடர்ந்தும் வஞ்சிக்கின்றன.

ஏனெனில் செயலற்ற, பொருளற்ற, வினையற்ற மேடைப்பேச்சு கள அரசியலுக்கு நெருடலை ஏற்படுத்தும். அரசின் இவ்விதமான ஜனநாயக விரோத நிலைப்பாடுகளை புள்ளி விவரத்தோடு எடுத்தியம்பக்கூடிய ஆளுமை, வல்லமை மிக்க, அனுபவம் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழர் தரப்பில் இல்லை.

ஊழலிலும் நிர்வாக முறைகேட்டிலும், மோசடியிலும், அசண்டைத்தனத்திலும் ஈடுபட்ட அரச ஊழியர்களையும் பிரதான அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறோம் எனக் கூறுவது எவ்வளவு வேடிக்கையானது? மாற்றம் என்பது சகல துறைகளிலும் நிகழ வேண்டும். இல்லாவிட்டால் பயனற்ற தொடக்கமாகவே காணப்படும். எப்பொழுதும் முடிவு தான் தொடக்கம் சரியா,தவறா என்பதனை தீர்மானிக்கும்.

புதிதாக அரசாங்கம் அமைகின்ற பொழுது அரசின் நிர்வாக மட்டத்திலே பல்வேறு விதமான மாற்றங்களை தலைகீழாக ஏற்படுத்துவார்கள். ஆனால் ஆளுநர்கள் மாற்றமும் சில பணிப்பாளர் சபைகளுக்குரிய மாற்றங்களையும் தவிர வேறு எந்த மாற்றமும் இதுவரை நிகழவில்லை. ஆர்வத்தோடு வாக்களித்த மக்கள் உடனடியான அடிப்படை மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள். மதுபான சாலை அனுமதி பெற்றவர்களுடைய பெயர் விவரங்களை வெளியிடுகிறோம் என காலத்தை கடத்தி வெறுமனே சிபாரிசு செய்தவர்களின் பெயர்கள் இன்றி எண்ணிக்கை மட்டுமே வெளிப்படுத்தி இருக்கிறார்கள். அந்தப் பெயர் விவரத்தை வெளியிடுவதற்கு எதற்காக அஞ்சுகிறார்கள் என்று புரியவில்லை.

தமிழரசுக் கட்சியின் ஜனாதிபதியுடனான சந்திப்பில் கூட ஆக்கபூர்வமான விடயங்கள் பேசாமல் ஒரு சினேகிதபூர்வ சந்திப்பாகவே அது முடிந்திருக்கிறது. அப்படியாயின் அரசாங்கம் தமிழர்களின் இனப்பிரச்சனை விடயத்தை பிற்போட யோசிக்கின்றதா? முறைமை மாற்றத்தில் கூட காலதாமதத்தை ஏற்படுத்துகின்ற போது இனப்பிரச்சினை தீர்வு விடயம் என்பது எவ்விதமான போக்கில் அணுகப்போகிறது என்பது தான் கேள்வி.

ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் மாகாண சபை முறைமையை ஒழிப்பேன் என்கிறார். அது மாத்திரமல்ல, வடக்கு, கிழக்கு இனப்பிரச்சினைக்கு அபிவிருத்தி ஒன்றே தீர்வு என்பதுதான் ஜே.வி.பியினுடைய அடிப்படை நிலைப்பாடாக இருக்கின்றது. இந்த நிலைமைகளை எப்படி கையாளப்போகின்றது என்று தான் தெரியவில்லை. புதிய அரசமைப்பு உடனடியாக நாடாளுமன்றத்துக்கு வரக்கூடிய ஏது நிலைகள் இல்லை. அதற்கு சில வருடங்கள் தாமதமாகலாம்.

அவ்விதமாக வந்தாலும் கூட தமிழர் தரப்பு எதிர்பார்க்கின்ற அளவுக்கு அந்த அரசமைப்பில் விடயங்கள் உள்ளீர்க்கப்பட்டிருக்குமா என்பது கேள்விக்குறியே. இப்போது நல்லவர்களாக



தமிழர்களுக்கு காட்டும் முகமூடி என்பது புதிய அரசமைப்பு உருவாக்கத்தோடு அவர்களின் அடிப்படை சுயரூபமும் இனவாத கோர முகமும் வெளிப்படும்.

அரசியலைக் கூர்ந்து கவனிக்காத இளையோர்களுக்கும், சந்தர்ப்பவாதத்துக்காக நலன் நாடி நிற்கும் கற்றறிந்த சமூகம் எனக் கூறப்படுபவர்களுக்கும், அரசியல் வணிகர்களுக்கும் விரைவில் ஜே.வி.பியினுடைய இனவாத வெளிப்பாடும் தமிழர் விரோத போக்கும் புரியும்.

தமிழ்த் தேசிய கட்சிகள் அரசோடு ஒத்துணர்ந்து போகின்ற வார்த்தைகளையே உபயோகிக்கின்றன. தேர்தல் காலத்திலும் ஜே.வி.பியின் கடந்த கால நிலைப்பாடு பற்றி ஒரு சிலரை தவிர எவரும் பகிரங்கமாக விமர்சிக்கவில்லை. இப்போதும் கூட அந்த நிலைப்பாட்டை தொடர்வார்களாயின் வெற்றி பெற்ற கட்சியில் உள்ளவர்கள் கூட விரைவில் காணாமல் போகக்கூடிய நிலைமை தோன்றலாம்.

தமிழ்த் தேசிய இருப்பு என்பது கொழும்பு அரசோடு ஒத்துப் போகின்றதாக மாறுமாயின் அரசியல் இருப்பில் அது காணாமல் போகக்கூடிய நிலை தோன்றும். கடந்த காலத்தில் ஒத்துணர்ந்து போனவர்கள் எவ்விதமான தோல்வியையும் பின்னடைவையும் சந்தித்தார்கள் என்பது வெளிப்படையானது.

ஆகவே எதிர்வரும் காலத்தில் எவ்வாறான மாற்றத்தை அரசு ஏற்படுத்தப் போகிறது என்பதனை பொறுத்திருந்து பார்க்கலாம். ஆனாலும் கூட மிகப் பெரிய மாற்றம் என்பது தமிழர்களுக்கு சாதகமாக இருக்கக்கூடிய வகையில் நிகழக்கூடிய ஏது நிலைகள் இல்லை என்பதே நிதர்சனமான உண்மை. அதனை விரைவில் வடகிழக்கில் இருந்து ஜே.வி.பிக்கு வாக்களித்தவர்களும் புரிந்து கொள்வார்கள். ■